# டாக்சியில் 28,000 பேர் பயணம் மெட்ரோ பயணியர் வரவேற்பு

சென்னை, அக். 5–

மெட்ரோ ரயில் பயணியர், ஷேர் டாக்சி, ஆட்டோவில், 28 ஆயிரம் பேர் பயணம் செய்து உள்ளனர்.

விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும், விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயிலில், பயணியர் வருகையை அதிகரிக்க, பல்வேறு ஏற்பாடுகளை, நிர்வாகம் செய்து வருகிறது.

இதையொட்டி, மெட்ரோ ரயிலில் வரும் பயணியர், நிலையங்களில் இருந்து, செல்ல வேண்டிய இடங்களுக்கு விரைவாக செல்ல ஏதுவாக, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., அண்ணா நகர் கிழக்கு, கோயம்பேடு, ஆலந்துார், வடபழனி நிலையங்களில், 'ஷேர் டாக்சி' வசதி செய்யப்பட்டுள்ளது.

கிண்டி, திருமங்கலம், ஆலந்துார், சின்னமலை, ஈக்காடுதாங்கல், கோயம்பேடு, பரங்கிமலை மற்றும் அசோக்நகர் நிலையங்களில், 'ஷேர் ஆட்டோ' வசதி செய்யப்பட்டுள்ளது.

ஷேர் ஆட்டோவுக்கு, 3 கி.மீ.,க்கு, 10 ரூபாயும், காருக்கு, 15 ரூபாயும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

செப்டம்பரில் மெட்ரோ ரயிலில் பயணம் செய்த பயணியர், நிலையங்களில் இருந்து, ஷேர் கார் மற்றும் ஆட்டோவில், 28 ஆயிரத்து, 831 பேர் பயணம் செய்துள்ளனர்.

இந்த திட்டம், மெட்ரோ பயணியர் மத்தியில், பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.